**8410**

Register Number | | | | | |

# தமிழ் — இரண்டாம் தாள்

காலம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்பு : i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

ii) முகவுரை, பொருளுரை, முடிவுரை என்ற அமைப்பில் கட்டுரை அமைதல் வேண்டும்.

I. கீழ்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** பற்றி இரு பக்கங்களில் கட்டுரை வரைக. $1 \times 10 = 10$

1. கார்த்திகேயனின் பண்பு நலன்கள்.
2. பட்டாளத்தார் தோட்டம் வளர்த்த விதம்.
3. சுப்புக்குட்டி விலகுவதற்கான சூழல்.

II. கீழ்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** பற்றிக் கடிதம் வரைக. $1 \times 10 = 10$

(குறிப்பு : கடிதத்தில் கையொப்பமிடும் இடத்தில் 'X' என்று குறிப்பிடவும். பெயரோ, பதிவு எண்ணோ அல்லது முகவரியோ எழுதினால் விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.)

4. நீவிர் வசிக்கும் பகுதியிலிருந்து வெளியில் சென்றுவர பேருந்து வசதி அமைத்துத் தர வேண்டி போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநருக்கு விண்ணப்பம் வரைக.
5. நீவிர் வாழும் பகுதியில் நூலகம் அமைத்துத் தருமாறு நூலக ஆணைக் குழுத் தலைவருக்கு ஒரு விண்ணப்பம் எழுதுக.
6. நீ கண்டுகளித்த அறிவியல் கண்காட்சி குறித்து நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

III. 7. கீழ்வரும் பாடலைப் படித்து பின்வரும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக. $5 \times 2 = 10$

தமிழர்க்குத் தமிழ்மொழியில் சுவடிச்சாலை
சர்வகலா சாலையைப் போல் எங்கும் வேண்டும்
தமிழிலிலாப் பிறமொழி நூல் அனைத்தும் நல்ல
தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்
அமுதம் போல் செந்தமிழில் கவிதை நூல்கள்
அழகியவாம் உரைநடையில் அமைந்த நூல்கள்
சுமை சுமையாய்ச் சேகரித்துப் பல்கலைசேர்
துறை துறையாய்ப் பிரித்தடுக்கி வைத்தல் வேண்டும்.

*வினாக்கள் :*

i) தமிழருக்கு எத்தகைய சுவடிச்சாலை வேண்டும் ?

ii) எவற்றை தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும் ?

iii) செந்தமிழ் நூல் எத்தகையது ?

iv) எந்தெந்த வகையில் தமிழ் நூல்கள் உள்ளன ?

v) தமிழ் நூல்களை எவ்வாறு அடுக்கி வைத்தல் வேண்டும் ?

[ Turn over

IV. 8. கீழ்க்காணும் உரைநடையை *மூன்றில் ஒரு பங்காகச்* சுருக்கி எழுதுக : 1 × 10 = 10

இளங்கோவடிகளுக்குத் தமிழ்நாடே தமிழாய் இருந்தது. அவர் குமரி முதல் இமயம் வரை தமிழ் ஆற்றல் விளங்க வேண்டும் என்றும் ஆர்வம் கொண்டிருந்தார். பரந்த உலகத்தையும் தமிழ்நாடாய்க் காணும் பேராசையும் கொண்டிருந்தார். இளங்கோவடிகளின் நாட்டுப்பற்று மூவேந்தரையும் வாழ்த்திப்பாடும் அன்பாய் விளங்கியது. அப்பற்று அத்துடன் அமையவில்லை. பந்தடிக்கும் பெண்கள் முதல் நெல் குற்றும் மகளிர் வரை உள்ளாரைப் புகழ்ந்து பாடச் செய்தது. தமிழகத்தில் வாழ்ந்த மக்களின் ஆடல் பாடல்களையெல்லாம் போற்றுவதாய் உயர்ந்து நின்றது. அவர் பாடிய காவியத்திலே பண்டைக் காலத்து அரச பக்தியையும், இக்கால அறிஞர் போற்றும் நாட்டுப் பற்றையும் காண முடிகிறது.

V. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக :

9. பெரும் பொழுது எத்தனை வகைப்படும் ? அவை யாவை ? 1 × 2 = 2

*அல்லது*

கருப் பொருள்கள் யாவை ?

10. தும்பைத் திணையாவது யாது ? 1 × 2 = 2

*அல்லது*

வாகை சூடுவார் யார் ?

11. குறள் வெண்பாவின் இலக்கணம் யாது ? 1 × 2 = 2

*அல்லது*

நிலைமண்டில ஆசிரியப்பாவின் இலக்கணத்தை எழுதுக.

12. கீழ்க்காணும் குறளை அலகிட்டு வாய்பாடு கூறுக : 1 × 2 = 2

நகையும் உவகையுங் கொல்லுஞ் சினத்தின்

பகையும் உளவோ பிற.

13. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் இரண்டனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக : 2 × 2 = 4

i) வாழ்க ii) வீழ்வார்

iii) முடித்த iv) தொங்குகின்ற.

14. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் **இரண்டனுக்கு** இலக்கணக் குறிப்பு தருக: $2 \times 2 = 4$

i) செங்கதிரோன் ii) அருமையே அருமையே

iii) மனமொழி மெய் iv) தவச் சிறிது.

15. கீழ்க்காணும் சொற்களில் எவையேனும் **இரண்டனுக்குப்** புணர்ச்சி இலக்கணம் தருக: $2 \times 2 = 4$

i) பைங்கூழ் ii) மரச்சட்டம்

iii) கொக்கியாது iv) வடகிழக்கு.

16. கீழ்க்காணும் இரு வினைமுற்றுகளில் ஏதேனும் **ஒன்றனுக்குத்** தொழிற்பெயர் எழுதுக : $1 \times 2 = 2$

i) வழங்கினான் ii) மொழிந்தனன்.

17. சொற்பொருள் பின்வரு நிலையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக. $1 \times 4 = 4$

*அல்லது*

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்

மேவன செய்தொ ழுகலான்.

- இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியைச் சுட்டி விளக்குக.

18. கீழ்க்காணும் ஏதேனும் **ஒன்றனுக்கு** விடை தருக : $1 \times 2 = 2$

ஏவல் வினைமுற்றை விளக்குக.

*அல்லது*

எதிர்கால வினையெச்ச வாய்பாடுகள் யாவை ?

19. கீழ்க்காணும் ஏதேனும் **ஒன்றனுக்கு** விடை தருக : $1 \times 2 = 2$

வழுவமைதி என்றால் என்ன ?

*அல்லது*

வினா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

VI. 20. கீழ்க்காணும் உரைநடையைப் படித்துத் தகுந்த நிறுத்தற் குறியிடுக : 2

பூ இவள்தானா நான் என்னவோ ஏதோவென்று எண்ணிவிட்டேன் இந்த மூன்று கால் மூதாட்டியா கவியரசி

21. கீழ்க்காணும் சொற்களில் **இரண்டனுக்குத்** திருந்திய சொற்களை எழுதுக : $2 \times 1 = 2$

i) உசிர் ii) வேர்வை

iii) சேதி iv) கண்ணாலம்.

22. கீழ்க்காணும் சொற்களில் **இரண்டினைப்** பிரித்து எழுதுக : $2 \times 1 = 2$

i) நண்ணுவதில்லை ii) தீதிலா

iii) ஊக்கமுடையான் iv) பழம்பாடல்.

23. கீழ்க்காணும் தொடர்களில் உள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக : $3 \times 2 = 6$

i) முயர்சி உடையாற் இகழ்ச்சியடையார்.

ii) உளைப்பே உயர்வு தறும்.

iii) தமிலுக்கு அமுதென்ரு பெயர்.

24. கீழ்க்காணும் வேற்றுமொழிச் சொற்களுக்குத் தனித்தமிழ்ச் சொற்களை எழுதுக : $2 \times 1 = 2$

i) பரீட்சை ii) ஸ்வீட்.

25. கீழ்க்காணும் தொடரைச் செய்தி வாக்கியமாக மாற்றுக : $1 \times 2 = 2$

உலக மக்கள் காந்தியடிகளை மறப்பார்களோ ?

26. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப்பிழைகளை நீக்குக : $1 \times 2 = 2$

எட்டப்ப மன்னரின் சபையில் தலைமை தமிழ் புலவராய் கடிகை முத்துப்பிள்ளை என்ற பெரியார் இருந்தார்.

27. கீழ்க்காணும் தொடரை வினாத் தொடராக மாற்றுக : $1 \times 2 = 2$

அரங்கேற்றம் ஒரு பெரிய திருவிழாவைப்போல் நடைபெறும்.

VII. 28. கீழ்க்காணும் ஆங்கிலத் தொடர்களைத் தமிழில் மொழிமாற்றம் செய்க : 4

When in England, Swamy Vivekananda one day went for a walk with a gentleman and a lady. A mad bull came on rushing towards them. The gentleman ran away with fear. The lady ran as fast as possible and unable to run away more, fell on the ground. Then Swamy came to a quick decision. He came in front of the lady. Raising his hands, he stared at the bull with courage. The bull drew back.

29. கீழ்க்காணும் மரபுத் தொடர்கள் அல்லது பழமொழிகளில் எவையேனும் **மூன்றனைத்** தமிழில் மொழிபெயர்க்க : $3 \times 2 = 6$

i) There is no substitute for hard work.

ii) A little learning is a dangerous thing.

iii) A thing of beauty is a joy for ever.

iv) A young calf knows not fear.

v) Well done is better than well said.